பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' – A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன்

மலர்: 20] சென்னை: ஆனி 21 (4—7—72) செவ்வாய் வெளியூர்: ஆனி 22 (5—7—72) புதன் [இதழ்: 17

## போர்க் குற்றவாளிகள் விசாரிக்கப்படுவது உறுதி

### முஜிபுர் ரகிமான் திட்டவட்ட அறிவிப்பு

புதுடில்லி, ஜூலை 4—

பாகிஸ்தான் போர்க் குற்றவாளிகள்மீது விசாரணை நடத்துவதைத் தடுக்க பூட்டோ எத்தனை மாநாடுகளில் கலந்துகொண்டாலும், விசாரணை நடத்தப்படுவது உறுதி என்று வங்க தேசத் தலைமையமைச்சர் ஷேக் முஜிபுர் ரகிமான், குஷ்டியாவில் ஒரு பொதுக்கூட்டத்தில் திட்டவட்டமாக அறிவித்

(4-ம் பக்கம் பார்க்க)

# காலித்தனங்களால் இந்த அரசைக் கவிழ்க்க முடியாது

## நிலப்பிரபுக்களின் சதித் திட்டத்தை முறியடிப்போம்

### கோவையில் அமைச்சர் மு. கண்ணப்பன் முழக்கம்

கோவை, ஜூலை 4—

"பொது அர்த்தால் — என்ற பெயரில் காலித்தனங்களை நடத்தி – அதன்மூலம் சட்டம், அமைதி, ஒழுங்கைக் கெடுத்து — கழக ஆட்சியைக் கவிழ்க்க நிலச்சுவான்தாரர்கள் திட்டமிட்டு — விவசாயிகளைத் தூண்டிவிட்டு வேடிக்கை பார்க்கிறார்கள்; இந்தப் பிற்போக்குச் சக்திகளின் கொட்டத்தை அடக்கக் கழகத் தோழர்கள் — ஆதரவாளர்கள் — பொதுமக்கள் அனைவரும் முன்வந்து 'அர்த்தால்' முழுத் தோல்வியடையச் செய்யவேண்டும்.

'நிலச் சீர்திருத்தச் சட்டத்தால் பாதிக்கப்பட்ட நிலச்சுவான்தாரர்கள், விவசாயிகளைத் தூண்டிவிட்டு இந்தப் போராட்டத்தை நடத்திவருகின்றனர்; கேரளத்திலும், மேற்கு வங்கத்திலும், அமைதி — சட்டம் — ஒழுங்குப் பிரச்சனையைக் கிளப்பி அந்த அரசுகளைக் கவிழ்த்தது போன்று இங்கும் கழக அரசைக் கவிழ்க்க முனைப்புக் காட்டுகின்றனர்; அது நடைபெறாது"

என்று அறநிலையத் துறை அமைச்சர் மு. கண்ணப்பன் அவர்கள் இங்கு நடைபெற்ற கொள்கை விளக்கப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் தெளிவுற விளக்கிக் கூறினார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"முன்னாள் அமைச்சர் மன்றாடியார், அரசுக்கு விவசாய வரி பாக்கி கட்டவேண்டியிருக்கிறது.

தம்முடைய நிலத்தை 'மேய்ச்சல் நிலம்' என்று கூறி ஏமாற்றிவந்த அவர், வரியிலும் பாக்கி வைத்திருக்கிறார்!

அவருடைய மேய்ச்சல் நிலம், தமிழக அரசு கொண்டுவந்த உச்சவரம்புச் சட்டத்தால் பாதிக்கப்பட்டுவிட்டது; அவருடைய ஏமாற்று வேலை பலிக்கவில்லை; எனவேதான் அவர் ஆத்திரமடைந்துள்ளார்; அரசுக்கு எதிராக விவசாயிகளைத் தூண்டிவிட்டுப் போராட்டம் நடத்தி வருகிறார்!

தமிழகத்தில் 5-ந் தேதியன்று 'பந்த்' போராட்டம் நடத்தப்போவதாக—'சர்வ கட்சியினர்' என்றுகூறிக்கொள்கிறவர்கள்— அறிவித்திருக்கின்றனர்; அதற்கு நீங்கள் யாரும் அஞ்சத் தேவையில்லை.

சென்ற பொதுத் தேர்தல் சமயத்தில் இவர்கள் அனைவரும் தி. மு. கழகத்தை எதிர்க்க ஒன்றுகூடியிருந்தனர்; ஒவ்வொருவரும் கழகத்தை எதிர்க்க முடியாமல், ஒன்றுசேர்ந்து எதிர்த்தனர்; அவர்களே 'விவசாயிகள் சங்கம்' என்ற அமைப்பை ஏற்படுத்திக் கொண்டு—கரங்களில் துப்பாக்கிகளுடன் கழக வேட்பாளர்களைத் தாக்கியும்-படுகாயப்படுத்தியும் வன்முறை வெறியாட்டங்களில் ஈடுபட்டனர்.

என்றாலும் அவர்களால் ஆட்சியைக் கைப்பற்ற முடியவில்லை; தோல்வியடைந்தார்கள். மக்களின் தீர்ப்பு மீண்டும் கழகத்துக்கே கிடைத்தது.

இதனால் அந்த ஏமாளிக் கூட்டம். கழக அரசின்மீது கொண்ட காழ்ப்பினால் — இப்போது மீண்டும் விவசாயிகளின் போராட்டம் என்ற போர்வையில் தலைகாட்ட முனைந்திருக்கின்றனர்!

இந்தப் போராட்டம் ஏழை விவசாயிகளுக்காக ஏற்பட்ட போராட்டமன்று; ஏழை விவசாயிகளை அடிமைகளாக்கி ஆண்டாண்டுக் காலமாக, 'எசமான ஆதிக்கம்' செலுத்தி வந்தவர்கள் தூண்டிவிட்டுள்ள போராட்டமாகும்!

இவர்களில் யார் யார் அரசுக்கு விவசாய வருமான வரியைச் செலுத்தவில்லை என்று கணக்கெடுக்கத் தமிழக அரசு தனி அதிகாரிகளை நியமித்து — அதனை வசூலிப்பதில் தீவிரம் காட்டியது.

மன்றாடியாரின் பாக்கி மட்டும் பல ஆயிரங்களாகும்; அவரது உறவினர் பார்வதி அர்ச்சுனன் தம்முடைய நிலத்துக்கு செலுத்தியுள்ள வரி 950 மட்டுமேதான்; ஆனால் அவருடைய நிலத்துக்காக செலுத்தப்பட வேண்டிய பாக்கி ரூ 28,000-த்திலிருந்து ரூ 30,000 வரையில் நிலுவை இருக்கிறது.

இதிலே 821 ஏக்கரை மேய்ச்சல் நிலமென்று கணக்குக் காட்டிவிட்டு அந்த நிலங்களில் நெல் பயிரிடுகிறார்கள்.

(இதையெல்லாம் கண்டுபிடித்ததும் நீதிமன்றம் வரையில் சென்று தடையுத்தரவு பெற்று வந்தார்கள்).

இப்படிப்பட்டவர்கள்தான் ஒரு காசுக்காகப் போராட்டம் நடத்துகிறார்கள்; மக்கள் இவர்களை நன்றாக அடையாளம் கண்டுகொள்ள வேண்டும்; இவர்கள் விரிக்கும் பயங்கர அரசியல் வலையில் விழாமல் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்."

# தமிழக முன்னேற்றத்தை தடைபடுத்தும் கிளர்ச்சி

## பேராசிரியர் அன்பழகன் கண்டனம்

### நிலப்பிரபுக்களுக்குக் கம்யூனிஸ்டுகளும் துணைபோவது குறித்து வியப்பு

திருச்சி, ஜூலை 4—

'ஜூலை 5-ல் எதிர்க் கட்சியினர் சிலர் நடத்த முற்பட்டிருக்கும் கிளர்ச்சி அரசியல் நோக்கமுடையதாகும்; தி. மு. கழக அரசைக் கவிழ்க்கும் நோக்கத்தில்தான் இவ்வாறு திட்டமிட்டுச் செய்ய முனைந்திருக்கின்றனர்"

என்று மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் க. அன்பழகன் அவர்கள், இங்கு நடைபெற்ற கொள்கை விளக்கக் கூட்டத்தில் உரையாற்றுகையில் சுட்டிக்காட்டினார்; அவர் மேலும் கூறியதாவது:—

'விவசாயிகளுக்குத் தற்போது உள்ள மின்சாரக் கட்டணங்கள் குறைக்கப்படுமானால், தமிழ்நாட்டில் மின்சார வசதியை மேலும் விரிவுபடுத்த உலக வங்கியிடமிருந்து கடனுதவி பெறுவது கடினமானதாகிவிடும்.

இந்தியாவிலுள்ள பெரும்பாலான மாநிலங்கள், தமிழ்நாட்டைக் காட்டிலும் அதிகமாக விவசாய மின்சாரக் கட்டணம் வசூலிக்கின்றன; பம்பு செட்டுகளுக்கு மின்வசதி அளிக்க அரசுக்கு அதிகச் செலவு ஏற்படுகிறது.

வலதுசாரி கம்யூனிஸ்டுக் கட்சி இக்கிளர்ச்சிக்குத் துணைபோவது வியப்புக்குரியதாகும்—எவருக்குமே விளங்காத ஒன்றாகும்."

# ஆட்சியை மாற்ற மக்களால்தான் முடியும்

## கழக அரசைக் கவிழ்க்க வேறு எந்தச் சக்தியாலும் இயலாது

### வேலூரில் புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். முழக்கம்

வேலூர், ஜூலை 3—

"தி.மு. கழகம் நியாயத்தை ஆதரிக்கிறது—அநியாயத்தை எதிர்த்துப் போராடுகிறது!

"தி.மு. கழகம் தேவையில்லை என்றால், அதை மக்களேதான் முடிவு செய்ய வேண்டும்; கழக ஆட்சியை மாற்றியமைக்க மக்கள் விரும்பினால்தான் முடியும்—வேறு எந்தச் சக்தியாலும் அசைக்க முடியாது!"

என்று கழகப் பொருளாளர் புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். அவர்கள் வேலூரில் நடந்த கொள்கை விளக்கப் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்; அவர் மேலும் பேசியதாவது:—

"தலைமையமைச்சர் இந்திராவை மதிக்கிறோம்—ஏன்—அவர், சனநாயகப் பண்புகளை மதிப்பவர் என்பதால்தான்!

இங்கு இந்திரா காங்கிரசாரும் போராட்டம் நடத்துகிறார்களாம்! யாரை எதிர்த்து? மண்ணெண்ணெய்க்கும், பம்பு செட் உறுப்புகளுக்கும் வரி போட்டது யார்—டில்லி அரசு!

'ரூ. 16 கோடிக்கு வரி போடுங்கள்' என்று மாநில அரசுக்கு டில்லி யோசனை கூறியிருக்கிறது; 'விவசாயிகளுக்கு நாம் கடன் கொடுத்திருக்கிறோம்; அதனால் அவர்கள் நல்ல பலன் அடைந்திருக்கின்றனர்; எனவே கேட்டுப் பெறுங்கள்' என்று டில்லி அரசு சொல்லியிருக்கிறது!

நாம்தான், 'விவசாயிகள் ஏழை— வரி வேண்டாம்' என்று சொல்கிறோம்; மானாவாரி நிலங்களுக்கு வரி ரத்து செய்தோம்; இதை இந்திரா காங்கிரசார் உணர வேண்டும்.

கம்யூனிஸ்டுகளும் போராட்டத்தில குதித்துள்ளனர்—எதற்காக?

அண்ணா காலத்தில் தொழிலாளர்கள் பிரச்சினை இல்லை; இப்போது தி. மு. கழகம், தொழிலாளர் பேரவை அமைத்துச் சீராகச் செயல்பட வழிவகை செய்து இருக்கிறது; இதுதான் வலது கம்யூனிஸ்டுத் தலைவர் கல்யாணசுந்தரத்துக்கு ஆத்திரத்தை உண்டாக்கியிருக்கிறது.

'அய்யய்யோ — தொழிற்சங்கம் மட்டும்தான் நம்மிடம் உள்ளது; அதிலும் தி. மு. கழகம் நுழைந்துவிட்டதே — நமக்கு இனி வேலை இருக்காதே' என்று அவர்கள் பதறுகிறார்கள்!

போராட்டம் நடத்துபவர்களைத் தமிழக மக்கள் அடையாளம் கண்டுகொள்ள வேண்டும்.

தி. மு. கழகம், கடமை — கண்ணியம் — கட்டுப்பாட்டை எப்போதும் பாதுகாக்கும் வன்முறை தலைதூக்கினால் சட்டம் பாதுகாக்கும் தி. மு. கழக ஆட்சி — கலைஞர் ஆட்சி வன்முறையை அனுமதிக்காது; என்ன சோதனை வந்தாலும் சரி — ஆபத்திலிருந்து மக்களைக் கழக ஆட்சி காப்பாற்றும்!

நீதியின் அடிப்படையில் கோடிக்கணக்கான பணத்தை விவசாயிகளுக்குக் கடனாகக் கொடுத்திருக்கிறோம்; இதைத் திருப்பிக் கேட்பது அநீதியா? சிந்தித்துப் பாருங்கள்!

"யாரும் பயப்படத் தேவை இல்லை; தமிழகத்தின் அமைதி காக்கப்படும்; சட்டம் அதற்குரிய வேலையை செய்யும்"

# மைசூர் மன்னரின் அரண்மனை

## வரலாற்றுச் சின்னமாகப் பாதுகாக்கப்படும்

பெங்களூர், ஜூலை 4—

மைசூரில் உள்ள மைசூர் மன்னரின் அரண்மனைக்கு ஒரு 'டிரஸ்டு' ஆக்கி — ஒரு வரலாற்றுச் சின்னமாகப் பாதுகாக்குமாறு மைசூர் அரசு, மத்திய அரசுக்குச் சிபாரிசு செய்திருக்கிறது.

அரண்மனைச் சொத்துக்கள் பற்றி மத்திய அரசுடன் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டுள்ள மைசூர் மன்னர், அந்தச் சொத்தைப் பராதீனம் செய்வது குறித்து உள்ள தடையை நீக்க இசைந்துள்ளதாக மேலவையில் முதலமைச்சர் அர்ஸ் தெரிவித்தார்.

மைசூரிலும் — பெங்களூரிலும் உள்ள அரண்மனைகளைப் பராமரித்து வர மத்திய அரசு ஆண்டுக்கு ரூ. 2 இலட்சம் செலவிட்டு வருவதாக முதலமைச்சர் மேலும் கூறினார்.

# பூட்டோ-இந்திரா மீண்டும் சந்திப்பர்

புதுடில்லி, ஜூலை 4—

இந்தியாவின் தலைமையமைச்சர் இந்திரா காந்தியும் — பாகிஸ்தான் அதிபர் பூட்டோவும் செப்டம்பர் திங்களில் மீண்டும் சந்தித்துப் பேசக்கூடும் என்று தெரியவருகிறது.

# எதிர்க் கட்சிக்காரர்களின் பித்தலாட்டப் பிரச்சாரம்

[★]

# முதலாளிகளுக்கு மின் கட்டணச் சலுகை தரப்படுவதாகப் புரட்டு

[★]

## விவசாய வருமான வரி விலக்கு -- கம்யூனிஸ்டுகட்கும் உடன்பாடா?

### சவானுக்கு எதிராகத் தமிழக இந்திரா காங்கிரசார் நடவடிக்கையா?-- கொள்கை விளக்கக் கூட்டத்தில் கழகத் தலைவர் கலைஞர் அரிய விளக்கம்

"வலது கம்யூனிஸ்டு நண்பர்களும் -- காங்கிரசுக்காரர்களும், தொழிற்சாலைகளுக்கு நாம் மின்சாரம் குறைந்த கட்டணத்திற்குத் தருவதால், விவசாயிகளிடம்தான் அதிகக் கட்டணம் வசூலிக்கிறோம் என்றும் பேசுகிறார்கள் -- எழுதுகிறார்கள்.

தொழிற்சாலைகளுக்கு அளிக்கப்படுவது உயர் அழுத்த (ஹை--டென்ஷன்) மின்சாரம்; விவசாயிகளுக்கு பம்பு செட்டுகளுக்குத் தரப்படுவது 'லோ--டென்ஷன்' மின்சாரம்!

'ஹை--டென்ஷன்' மின்சாரம் என்றால் -- வந்த வேகத்திலேயே அந்த மின்சாரத்தைத் தருவது; அதற்கு அதிகச் செலவு ஆகாது; 'லோ--டென்ஷன்' என்றால், வந்த வேகத்தைக் குறைத்து -- நிதானப்படுத்தி -- விவசாயத் துறைக்கு பம்பு செட்டுகளுக்குத் தரப்படுவது; அதற்கு அதிகச் செலவாகும்.

பொதுவாக மனிதன் கோபித்துக் கொள்வது சுலபம் -- அமைதியாக நிதானமாக இருப்பதுதான் சிரமம்; அதைப்போல, 'ஹை--டென்ஷ'னுக்குச் செலவு குறைவு; 'லோ--டென்ஷ'னுக்குச் செலவு அதிகம்.

இந்த 'ஹை--டென்ஷன்'தான் தொழிற்சாலைகளுக்குத் தரப்படுகிறது; அதிலே மின்சார வாரியத்திற்கு ஆகிற செலவு குறைவு; உதாரணமாக, ஒரு யூனிட் 'ஹை--டென்ஷன்' மின்சாரம் ஒரு தொழிற்சாலைக்குத் தரப்படுமானால், மின்சார வாரியத்திற்கு அதற்காக ஆகும் செலவு 7.35 காசுகள்தான்.

அதே நேரத்தில் விவசாயிகள் வைத்திருக்கின்ற ஒரு பம்புசெட்டுக்கு 'லோ--டென்ஷ'னில் மின் இணைப்புத் தரப்படுமானால், மின்சார வாரியத்திற்கு ஒரு யூனிட்டுக்கு ஆகின்ற செலவு 20.22 காசு.

நாம் அவர்களுக்கு என்னென்ன சலுகைகள் அளித்திருக்கிறோம் என்பதையும் எண்ணிப் பார்க்கவேண்டும்; தொழிற்சாலைகளுக்கு 'ஹை--டென்ஷ'னில் 7.35 காசு என்றால், 1.45 காசு மட்டுமே சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது.

பம்பு செட்டுக்கு ஒரு யூனிட் மின்சாரம் கொண்டுபோய்க் கொடுக்க 20.22 காசு செலவாகிறது; ஆனால் அவர்களிடமிருந்து நாம் பெறுவது 12 காசு அல்லது 10.8 மட்டுமேதான்; ஆக, மின்சார வாரியத்திற்கு அதனால் ஒரு யூனிட்டுக்கு ஏற்படுகின்ற இழப்பு 10 காசு அல்லது 8 காசு: இதன்மூலம் மொத்தமாக விவசாயிகளுக்கு அளிப்பதில் மட்டும் மின் வாரியத்திற்கு ஏற்படுகின்ற இழப்பு ரூ. 14 கோடி.

அதேநேரத்தில், தொழிற்சாலையை எடுத்துக்கொண்டால், சிமெண்டுத் தொழிற்சாலைக்கு 4.8 காசுக்கு மின்சாரம் அளிக்கிறோம்; அதிலே நமக்கு அதிகச் செலவு 7.35 காசு; ஆக அதில் நமக்கு ஏற்படுகின்ற இழப்பு 3 காசு மட்டுமேதான்.

இரசாயனத் தொழிற்சாலைகளுக்கு 4 காசுக்குத் தருகிறோம்; அதிலே இழப்பு 3.35 காசு.

அலுமினியத் தொழிற்சாலைக்கு (மால்கோ) 1.6 காசுகளுக்கு அளிக்கிறோம்; அதிலே இழப்பு 6 காசு.

இந்தக் கட்டண நிர்ணயம், கழக அரசு வந்த பிறகு நிர்ணயிக்கப்பட்டதல்ல -- காங்கிரசு ஆட்சிக் காலத்திலேயே நிர்ணயிக்கப்பட்டது.

மற்ற தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில், எண்ணெய் ஆலையாக இருந்தால் 19 காசு மின் கட்டணம்; சர்க்கரை ஆலைக்கு 8.7 காசு; தொழிற்பேட்டைகளுக்கு 18 காசு; மோட்டார் வாகனத் தொழிற்சாலைகட்கு 17 காசு -- என்றுதான் நாம் மின் கட்டணத்தை வசூலித்துக் கொண்டிருக்கிறோம்.

ஆக, தொழிற்சாலைகட்கு மின்சாரம் தருவதில் மின் வாரியத்துக்கு ஆகின்ற செலவு -- இழப்பு குறைவானதாகும்.

மால்கோ தொழிற்சாலையில் அரசின் பங்கு அதிகம்; இத்தாலி நாட்டின் தொழில் உறவோடு அந்தத் தொழிற்சாலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது; அதற்கு 1.6 காசு என்று நிர்ணயித்தார்கள் யார் காலத்தில் -- எங்கள் காலத்திலா -- அல்ல; அல்ல; காமராசர்--பக்தவத்சலம் ஆட்சிக் காலத்தில் நிர்ணயித்தார்கள்.

மெட்ராஸ் அலுமினியம் கம்பெனி லிமிடெட் இருக்கிறதே--அதற்கு 10,000 டன்வரை ஒரு கிலோவாட் ரூ. 120 என்று வசூலித்தார்கள் -- காங்கிரசு ஆட்சிக் காலத்தில்; கழக ஆட்சியில் அதை ரூ. 180 என்று உயர்த்தியிருக்கிறோமே தவிர, தொழிற்சாலைக்காகக் குறைத்துவிடவில்லை!

தாரங்கதாரா கெமிக்கல்சுக்கு 15,000 கிலோவாட் வரையில் -- ஒரு கிலோவாட்டுக்கு ரூ. 150 என்று காங்கிரசு ஆட்சிக் காலத்தில் நிர்ணயித்திருந்தார்கள்; அதனை ரூ. 284 என்று உயர்த்தியிருக்கிறோமேயல்லாமல் குறைத்துவிடவில்லை!

பேட்டூர் கெமிக்கல்சில் ஒரு கிலோவாட்டுக்கு ரூ 155—ரூ 190 என்று இரண்டு பிரிவாக காங்கிரசு ஆட்சிக் காலத்தில் நிர்ணயித்திருந்தார்கள்; அதை நாம், ஒரு கிலோவாட்டுக்கு ரூ. 220 என்றும் -- ரூ. 308 என்றும் -- ரூ. 329 என்றும் உயர்த்தியிருக்கிறோமேயல்லாமல் குறைத்துவிடவில்லை!

#### பிற மாநிலங்களின் நிலை என்ன?

தொழிற்சாலைகட்கு ஏதோ நாம் குறைத்துவிட்டோம் என்று சொல்கிறார்களே -- சில மாநிலங்களோடு அதனை ஒப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

தாரங்கதாரா கெமிக்கல்ஸ் இருக்கிறதே அதற்குத் தமிழ்நாட்டில் இன்று கிலோவாட்டுக்கு ரூ. 312-ஆக இருக்கிறது; ஆனால், அரியானாவில் ரூ 274; வலது கம்யூனிஸ்டுகள் ஆளுகின்ற கேரளத்தில் ரூ 189; மைசூரில் ரூ. 194; பஞ்சாபில் ரூ.285.

ஆக, இந்த மாநிலங்களோடு ஒப்பிடும்போது, நம்முடைய மாநிலத்தில்தான் ரூ. 312 என்ற அளவிற்கு அதிகமாக வசூலித்துக் கொண்டிருக்கிறோம்.

"சிலாப் சிஸ்டத்தில்'கூட, '200 யூனிட்டுவரை 12 காசு கொடுங்கள்; அதற்குமேல் அதிகச் செலவானால் பழைய கட்டணத்தைக் கொடுங்கள்' என்று சொல்லிவிட்டோம்; சிலர் இதைப் புரிந்து கொள்ளாமல் தவிக்கிறார்கள்; 'இதனால் சிறிய விவசாயிகளுக்குப் பயனில்லை' என்கிறார்கள்; பார்வைக்கு வேண்டுமானால் அப்படித் தெரியலாம்; ஆனால், நடைமுறையைப் பார்க்கவேண்டும்.

நடைமுறையில் பார்த்தால், கோவை மாவட்டத்திலும் வேறு பல வறண்ட இடங்களிலும் இருக்கின்ற கிணறுகள் ஆழமானவை; அங்கே 5 குதிரை ஓட்ட சக்தியுள்ள இயந்திரத்தை வைத்துக் கொண்டு நீர் இறைக்கின்றவர்கள் 5 ஏக்கர் நிலம் உடையவர்களாக இருப்பார்களானால், அவர்களுக்கு ஆகின்ற யூனிட் 1,000 அல்லது 800 யூனிட்டுக்குக் குறைவில்லை.

800 யூனிட் ஒருவர் செலவு செய்கிறார் என்றால், 200 யூனிட்டுக்கு 12 காசு வீதமும், மீதமிருக்கின்ற 600 யூனிட்டுக்கு 10.8 காசும் என்று வசூலித்தால் விவசாயிக்கு இலாபமா -- அல்லது 200 யூனிட்டுக்கு 10.8 காசு என்றும், மீதமுள்ள 600 யூனிட்டுக்கு 12 காசு என்று வசூலித்தால் விவசாயிக்கு இலாபமா?

ஆகவே, 200 யூனிட்வரையில் 2.40 காசு மட்டுமேதான் ஒரு சிறிய விவசாயி தரவேண்டியிருக்கிறது; பெரிய விவசாயிக்கு 400 யூனிட் வரையில் 12 காசும் -- அதற்குமேலே பழைய கட்டணம் என்று சொல்லி இருப்பதால் ரூ. 4.80 அதிகமாகத் தரவேண்டியிருக்கிறது.

#### சீமான்களின் சீற்றத்துக்குக் காரணம்

இதைத் தரமுடியாத ஏழைகளா இன்று ஐந்து ஏக்கர் -- பத்து ஏக்கர் வைத்திருக்கிறார்கள்? அவர்களால் இதனைத் தரமுடியும்; இருந்தாலும், ஏதாவது இந்த அரசுக்கு விரோதமாகப் பிரச்சினைகளையும் -- தகராறுகளையும் எழுப்பக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார்கள்; அதற்குத் தலைவராக இருப்பவர், பரம ஏழை -- பழையக் கோட்டைப் பட்டக்காரர்! அவர் ஏறத்தாழ 1,995 ஏக்கருக்குச் சொந்தக்காரர்!

அவரது நிலத்தைக் காமராசரின் நிலச் சீர்திருத்தச் சட்டம் தொடக்கூட இல்லை; காரணம் என்ன? சட்டம் வருவதற்குமுன்பே, 'மேய்ச்சல் நிலத்திற்கு விதிவிலக்குத் தரப்போகிறோம்; உனது 1,900 ஏக்கரை மேய்ச்சல் நிலம் -- மாடு மேய்வதற்கான நிலம்' என்று எழுதி வைத்துவிடு' என்று கூறிவிட்டார்கள்; அதுபோலவே மேய்ச்சல் காடுகளுக்கு விதிவிலக்குத் தந்தார்கள்!

அப்படி விதிவிலக்குத் தரப்பட்ட நிலங்கள் தவறுகப் பயன்படுத்தப்பட்டனவா என்பதை அவர்கள் காலத்திலிருந்தே நில வாரியம் (லேண்ட் போர்டு) கண்டுபிடித்தது; அதன்படி, மன்றாடியார் நிலத்திலிருந்து 800 ஏக்கரை, 'விதிவிலக்கிலிருந்து பிரிக்கவேண்டும்' என்று தாக்கீது பிறந்தது; உடனே மன்றாடியார், அன்றைக்கு இருந்த அரசுக்கு எதிராக ஒரு வழக்குப் போட்டார்!

நமது கழக ஆட்சியிலும், 'அவரது நிலத்தில் மேலும் 200 ஏக்கரில் பயிர் விளைவிக்கப்படுகிறது' என்று கண்டுபிடிக்கப்பட்டது.

மன்றாடியார் இதை எதிர்த்தும் வழக்குப் போட்டார்; அப்போது அவர் கூறினார் -- 'நான் நெல் போட்டது உண்மை; அது எனக்காக அல்ல -- மாடுகளுக்கு வைக்கோல் வேண்டும் என்பதற்காகப் போட்டேன்; வைக்கோலை அன்புக்குரிய மாடுகளுக்குத் தந்தேன்; நெல்லை மட்டும் நான் எடுத்துக்கொண்டேன்' என்று!

"விதிவிலக்குகள் அளிக்கப்பட்ட நிலங்கள், கரும்புத் தோட்டம் -- மேய்ச்சல் காடுகள் என்ற பெயரில் இருக்குமானால், அதை விடுவதாக இல்லை" என்று கழக அரசு அறிவித்துவிட்டது!

தோழர்களே -- நம்மீது சீமான்களுக்கு ஏற்பட்ட சீற்றத்துக்குக் காரணம் தெரிகிறதா?

'விவசாய வருமான வரியை அடியோடு விட்டுவிட வேண்டும்' என்று அவர்கள் கேட்கிறார்கள்; இதில் வேடிக்கை என்னவென்றால், 'இந்திரா காங்கிரசுக்காரர்களும் இதை ஆதரிக்கிறார்கள்' என்பதுதான்!

#### இந்திரா காந்தியிடமிருந்து தந்தி வருமா?

நான் சொல்லிக் கொள்கிறேன் -- 'விவசாய வருமான வரி தேவையில்லை; போடக்கூடாது என்று நாளைக்கே இந்திரா காந்தியார் எனக்குத் தந்தி கொடுக்கட்டும் -- அதைக் கைவிடத் தயாராக இருக்கிறேன்.

பணப் பயிர்களுக்கு விவசாய வருமான வரி போடக்கூடாதாம் -- கூறுபவர்கள் யார் -- கம்யூனிஸ்டுகள்! அவர்கள் மட்டுமல்ல -- இந்திரா காங்கிரசாரும் சொல்கிறார்கள்; இங்கிருக்கின்ற இந்திரா காங்கிரசுக்காரர்களின் கொள்கையைத் தலைமையிலுள்ளவர்கள் ஒப்புக் கொள்கிறார்களா?

மத்திய அரசின் நிதி அமைச்சர் சவான் கூறுகிறார் -- 'நம் இதுவரையில் எல்லா முனைகளிலும் வரி போட்டு முடித்துவிட்டோம்; இனி நமது பார்வை திரும்பவேண்டிய இடம் 'விவசாயத் துறை' என்று!

'அவர் அப்படிக் கூறவில்லை' என்று நிரூபிப்பார்களானால், அந்தப் 'போராட்ட வீரர்'களின் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்கத் தயாராக இருக்கிறேன்.

'ரூ. 16 கோடிக்கு வரி போடு' என்று மத்திய அரசு நமக்குத் தாக்கீது அனுப்புகிறது! எல்லா மாநிலங்களுக்கும் அனுப்புவதுபோல், பொதுப்படையாக இது அனுப்பப்பட்டது அல்ல; 'தமிழ்நாட்டிற்கு என்று தனியாக இன்னின்ன துறைகளில் போடுங்கள்' என்று குறித்து அனுப்பிருக்கிறார்கள்.

ரூ. 7 கோடி அளவில் மின் கட்டணத்தை அதிகரித்துக் காட்ட வேண்டும்' என்றும் கூறியிருக்கிறார்கள்!

ஆனால் இங்கிருக்கின்ற இந்திரா காங்கிரசுக்காரர்களும் மற்றவர்களும், மின் கட்டணமா -- விட்டோமா பார்' என்று ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள்!"

## இருநூறு பேர்களில் ஒருவர்கூடத் தேறவில்லை

### தலைமை ஆசிரியரே இல்லாத உயர்நிலைப் பள்ளி

பெங்களூர், ஜூலை 4—

கோலார் தங்கவயலில் உள்ள அரசினர் உயர்நிலைப் பள்ளியில், இவ்வாண்டு எஸ் எஸ் எல்.சி. தேர்வு எழுதிய 200 மாணவர்களில் ஒருவர்கூடத் தேர்வு பெறவில்லை.

சென்ற ஆண்டும்கூட இப்பள்ளியில் எஸ் எஸ்.எல்.சி. தேர்வில் ஒரு மாணவர்கூடத் தேர்வு பெறவில்லை.

இத்தகவலை, கோலார் தங்கவயல் பகுதியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் ஏ. ஆறுமுகம், மைசூர் சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

"அந்தப் பள்ளியில், கடந்த மூன்றாண்டுகளாகத் தலைமை ஆசிரியர் யாருமே இல்லை" என்றும் அவர் சொன்னார்.

## ஏற்றுமதி வியாபாரத்திலும் மோசடி-- வியாபாரிகள்மீது வழக்கு

சென்னை, ஜூலை 4—

பெரும் அளவு பருத்தித் துணிகளைச் செயற்கைப் பட்டுத் துணிகள் என்று ஏமாற்றி, வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ததாகக் குமாரபாளையம்—பள்ளிபாளையம் ஆகிய நகரங்களைச் சேர்ந்த சில முக்கியக் கைத்தறி வியாபாரிகளுக்கு எதிராகவும், அவர்களுக்கு உடந்தையாக இருந்ததாக கோயமுத்தூர் வட்டார நெசவுக் கமிஷனர் அலுவலகத்தைச் சேர்ந்த ஓர் அதிகாரிக்கு எதிராகவும் குற்றப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

மத்திய புலனாய்வுத் துறையின் சிறப்புப் போலீசுப் படையைச் சேர்ந்த பொருளாதாரக் குற்றப் பிரிவு சென்னை தனி நீதிபதி முன்னிலையில், சட்ட விரோதமாக மோசடியில் ஈடுபட்ட குற்றத்துக்காகவும், குற்றத் தடுப்புச் சட்டத்தின்படியும் இவர்களுக்கு எதிராகக் குற்றப் பத்திரம் தாக்கல் செய்திருக்கிறது.

இந்தக் கைத்தறி வியாபாரிகள் 71,400 மதிப்புள்ள செயற்கைப் பட்டுத் துணிகளைத் தாங்கள் ஏற்றுமதி செய்திருப்பதாகப் பொய் அறிவிப்பு கொடுத்தார்களாம்; கோவை வட்டார அதிகாரி; 'இந்த வியாபாரிகள் ஏற்றுமதி செய்த சரக்குகள் செயற்கைப் பட்டுத் துணிகள்தான்' என்று பொய் சான்றிதழ் வழங்கியதாகக் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறார்.

(5-ம் பத்தித் தொடர்ச்சி)

ஆனால் அது இங்கு அல்ல -- சிங்கப்பூரில்!

தலை முடியை வளர்த்துக் கொண்டு திரியும் இளைஞர்களுக்கு எதிராக ஓர் இயக்கத்தை சிங்கப்பூர் அரசு தெரிவித்திருக்கிறது.

## நெல் உலர வைக்கும் புதிய இயந்திரம்

மழைக் காலமானாலும் அறுவடையாகும் நெல்லை உலர வைக்க ஒரு புது இயந்திரம் பிரிட்டனில் தயாராகியிருக்கிறது.

தமிழ்நாட்டில் குறுவை அறுவடை ஐப்பசித் திங்களில் ஆகிறது; அப்போது இங்கு கடும் மழை பெய்யும்; அறுவடையாகின்ற நெல்லை அதன் ஈரம் உலராமல் சேர்த்து வைப்பது கடினம்; ஈரத்தோ வைத்தாலும் நெல் கெட்டுவிடுகிறது; இதற்கு விடைதான் புதிய இயந்திரம்!

எந்த வகையான சேமிப்புக் கிடங்குகள் இருந்தாலும்சரி -- அங்கு காற்றின் வெப்ப நிலையைச் சுமார் 6 டிகிரி (சென்டிகிரேட்) அளவுக்கு உயர்த்தக்கூடியது இந்த இயந்திரம்; இதனால் ஈரமாக இருக்கும் நெல் மிக விரையாக உலர்ந்துவிடுகிறது; சூரிய வெளிச்சம் வந்து உலர வேண்டும் எனக் காத்திருக்கத் தேவையில்லை.

## பின்தங்கிய மாவட்டங்களில் செய்யப்படும் முதலீடு

### 'பத்து சதவிகிதம் மத்திய அரசு உதவும்' என்கிறார் அமைச்சர்

பம்பாய், ஜூலை 3—

"பின்தங்கிய மாவட்டங்களில் செய்யப்படும் முதலீடுகளுக்கு 10 சதவிகிதம் உதவி அளிப்பது என்று மத்திய அரசு முடிவு செய்திருக்கிறது.

"ஒவ்வொரு மாநிலத்திற்கும் இந்த உதவித் தொகை கிடைக்கும்; குறைந்தபட்சம் மூன்று மாவட்டங்களில் செய்யப்படும் முதலீடுகளுக்கு உதவித்தொகை வழங்கப்படும்; சில மாநிலங்களில் ஆறு பின்தங்கிய மாவட்டங்களுக்கு உதவித் தொகை தரப்படும்"

என்று திட்டத்துறை துணையமைச்சர் மோகன்தாரியா கூறியிருக்கிறார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"விலைவாசிகளை நிலைநிறுத்த அவசியமானால் பயன்படுத்துவோர் பண்டங்களின் தயாரிப்பில் அரசுத்துறை ஈடுபடும்.

"ஐந்தாண்டுத் திட்ட அறிக்கைகளின் அடிப்படைஅணுகுமுறை வறுமையை ஒழிப்பதுதான்."

## வங்கதேசத்துக்கு உரிமை உண்டு

புதுடில்லி, ஜூலை 3—

"இந்தியா -- பாகிஸ்தான் போரின்போது கைது செய்யப்பட்ட பாகிஸ்தான் அதிகாரிகளை விசாரணை செய்ய வங்க தேசத்துக்கு உரிமை உண்டு"

என்று ஜினிவாவிலுள்ள சர்வதேச நீதிபதிகள் கமிஷன் தெரிவித்திருக்கிறது.

"பாகிஸ்தான் இராணுவம், மனித உரிமைகளை மீறி அட்டூழியங்களை இழைத்திருக்கிறது எனக் கமிஷன் கருதுகிறது" என்று இத்தகவலைத் தெரிவித்த சுவிட்சர்லாந்து வானொலியின் நிருபர் கூறினார்.

"குற்றவாளிகளான அதிகாரிகளை, பெரும்பாலான நீதிபதிகள் நடுநிலைமை நாடுகளைச் சேர்ந்தவர்களாக இருக்கும் சர்வதேச நீதி மன்றத்தின் முன்னால் விசாரணைக்குக் கொண்டு வர வேண்டும்" என்றும் கமிஷன் கூறியிருக்கிறது.

## தலை முடி வளர்ப்பதற்கு எதிராக இயக்கம்

### சிங்கப்பூர் அரசு தொடங்கியிருக்கிறது

சிங்கப்பூர், ஜூன் 30—

"நீளமாகத் தலை முடியை வளர்த்துக்கொண்டுள்ள ஆண்கள் கடைசியாகத்தான கவனிக்கப்படுவார்கள்" -- இப்படி ஓர் அறிவிப்பு, பள்ளிகளிலும் -- கல்லூரிகளிலும் -- குடியேற்றத் துறை அலுவலகங்களிலும் -- இன்னும் பல இடங்களிலும் பல மொழிகளிலும் வெளியிடப்படும்;

(3-ம் பத்திப் பார்க்க)

## மனச்சாட்சி உள்ளவர் பதில் கூறட்டும்

### இந்த ஆட்சியினர் செய்த தவறு என்ன?

#### ஆலைத் தொழிலாளருக்கு அள்ளிக்கொடுத்தது யார்?--- விவசாயத் தொழிலாளருக்குக் கூலி நிர்ணயமும் வீட்டுமனைப் பட்டாவும் வழங்கியது எந்த ஆட்சி?

சென்னை, ஜூலை 4—

"ஆர்ப்பாட்டம் நடத்தி, சட்டம் -- ஒழுங்கினைக் கெடுத்து, அதனால் ஆட்சியை மாற்றிவிடுவார்கள்' என்பதை வாதத்திற்காக ஒப்புக்கொண்டு கேட்கிறேன்; இந்த ஆட்சியை மாற்றிவிட்டுப் பிறகு யார் ஆட்சிக்கு வருவது?

இந்த ஆட்சியை மாற்றத் துடிக்கிறார்களே -- இந்த ஆட்சியில் என்ன குறையைக் கண்டார்கள்? 'இவ்வளவு அமைதியாக ஆட்சி நடைபெறுகிறதே' என்று வருந்துகிறார்களா? அல்லது, 'இந்த அரசு பிரச்சினைகளை அமைதியாக அணுகியது தவறு' என்று கூறுகிறார்களா?

கோவையில் 50,000 ஆலைத் தொழிலாளிகள் கிளர்ச்சி நடத்தினார்கள்; 40 நாள் வேலைநிறுத்தம் நடத்தினார்கள்; துப்பாக்கி -- தடியடிப் பிரயோகம் எதுவும் இல்லாமல் அந்தப் பிரச்சினையைத் தீர்க்க முனைந்தோம்; நான் கூறிய சமரசத் திட்டத்தைத் தொழிலாளிகள் ஒப்புக்கொண்டனர்; ஆனால், முதலாளிகள் ஏற்றுக்கொள்ளவில்லை; மிகவும் வலியுறுத்திக் கூறினேன்—அப்போதும் முதலாளிகள் ஏற்றுக்கொள்ளவில்லை.

அப்போது நான் கூறினேன் -- 'இதை ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் எல்லா ஆலைகளையும் தேசியமயமாக்கி அரசாங்கமே ஏற்றுக்கொள்ளும்' என்று; 'இது பாவமானது என்றால், கம்யூனிஸ்டு சார்புள்ள தொழிலாளர்களே -- என்னை மன்னித்துவிடுங்கள்!

கோவை ஆலைகள் மூடப்பட்டுத் தொழிலாளர்கள் துயருற்றபோது -- அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் -- அவர்களுக்கு இரண்டு இலட்சம் ரூபாய் அளித்தார்.

இப்போது நான் முதலமைச்சராக இருக்கின்ற காலத்தில், அதே கோவைத் தொழிலாளிகளுக்காக ஐந்து இலட்சம் ரூபாய் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து அள்ளித் தந்தேன்.

அறைகூவலாகக் கேட்கிறேன் -- பிற மாநிலங்களில் எத்தனையோ ஆலைகள் மூடப்பட்டிருக்கின்றன; அதனால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்காக எந்த முதலமைச்சர் இவ்வளவு ரூபாய் நிவாரண நிதியாகத் தந்தார் -- சொல்லமுடியுமா?

இப்படி அமைதியான முறையில் பிரச்சினைகளை அணுகுவதால், எங்களை 'இளித்தவாயர்கள்' என்று நினைக்கிறார்களா? 'ஏமாளிகள்' என்று நினைக்கிறார்களா?

தொழிலாளர்களுக்கு நாங்கள் நிவாரண நிதி தந்தோம் என்றால், நாங்கள், 'தொழிலாளிகளின் -- பாட்டாளிகளின் அங்கங்கள் -- நண்பர்கள்' என்ற காரணத்தால்தான் அந்த நடவடிக்கையை மேற்கொண்டோம்.

பல்லாண்டுகளாக விவசாயத் தொழிலாளருக்குக் கூலி நிர்ணயம் செய்யாமல் இருந்த நிலையை மாற்றிட, கணபதியா பிள்ளை குழுவை நியமித்து -- கூலி நிர்ணயச் சட்டம் கொண்டுவந்தோமே -- அது தவறா?

20 ஆண்டுக் காலமாகத் தஞ்சை மாவட்டத்தில் விவசாயத் தொழிலாளர்கள் குடியிருக்க இடம் கூட இல்லாமல் திண்டாடினார்கள்; தாங்கள் குடியிருக்கும் இடத்தைச் சொந்தமாக்கவேண்டும் என்று மசஜர் தந்தார்கள்; காமராசர் அதைக் காலில் போட்டு மிதித்தார்! பக்தவத்சலம் ஏறிட்டுக்கூடப் பார்க்கவில்லை!

ஆனால், அந்த விவசாயத் தொழிலாளிகள் மனம் மகிழ்ச்சியடைகின்றவகையில், 1,15,000 பேருக்கு குடி மனைப் பட்டா தந்திருக்கிறோம்.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் நான் தெளிவாகக் கூறியிருக்கிறேன் -- தஞ்சாவூர் மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் குடியிருப்பு மனை தரும் திட்டம், தமிழ்நாடு முழுவதும் விரிவுபடுத்தப்பட வேண்டும்' என்று!

அதுமட்டுமல்ல -- குத்தகை நிலுவை தர முடியாமல் குத்தகைதாரர்கள் படும் சிரமத்தை உணர்ந்து, இந்த அரசு, 'இந்த ஆண்டு குத்தகையைச் செலுத்தினால் போதும் -- பழைய கடனைத் தரவேண்டியதில்லை' என்று திட்டம் தீட்டியிருக்கிறோமே -- அது தவறா?

'உரம் கிடைக்கவில்லையே' என்று கண்ணீர்விட்ட விவசாயிகளின் துயரத்தை மாற்றி, எவ்வளவு எளிதில் உரம் கிடைக்கச் செய்தோம் என்பதை உண்மையான விவசாயிகள் உணருவர்!

ஆகவே, இந்த அரசு விவசாயிகளுக்கு எதிரான அரசு அல்ல! விவசாயிகளின் அரசு -- விவசாயிகளுக்குப் பாடுபடும் அரசு!

தமிழகம் காணாத வறட்சி ஏற்பட்ட நேரத்தில், 'கிராமப்புற விவசாயிகள் வாடக்கூடாது -- வறுமை வயப்படக்கூடாது' என்று கருதி, மத்திய அரசிடம் வலியுறுத்தி நிவாரண நிதி பெற்றோம்; 'பணம் கொடுக்காதே -- இவர்களுக்கு' என்று இங்கேயுள்ளவர்கள் தடுத்தும்கூட, இந்திரா காந்தியாரை இங்கு வரவழைத்து - நிலைமைகளை எடுத்துக் கூறி -- தமிழகத்தை வறட்சியிலிருந்து காப்பாற்றிய பெருமை இந்த அரசுக்கு உண்டு என்பதை யாரும் மறுத்துவிட முடியாது!

இதையெல்லாம் மறந்துவிட்டு இப்படிப்பட்ட போராட்டத்தில் யார் ஈடுபட்டாலும், அதைச் சமாளிக்கக் காவல்துறை இருக்கிறது!"

## இரஷ்யாவின் மற்றொரு விண்வெளிக் கலம்

மாஸ்கோ, ஜூலை 3—

விண்வெளியில் ஆய்வுகள் நடத்துவதற்காக 'பிரக்னேஸ்-2' என்னும் புதிய விண்வெளிக் கலத்தை இரஷ்யா, கடந்த வியாழனன்று விண்வெளியில் செலுத்தியது.

இந்தக் கலத்தில் பல ஆய்வுக் கருவிகள் அமைக்கப்பட்டுள்ளன; இதை ஒரு 'தானியங்கி ஆய்வு நிலையம்' எனலாம்; மனிதர்கள் எவரும் இதில் இல்லை.

ஏற்கனவே, கடந்த ஏப்ரல் 14-ந் தேதி, 'பிரக்னேஸ்-1' என்னு இதேபோன்ற ஒரு தானியங்கி ஆய்வு நிலையத்தை இரஷ்யா விண்வெளியில் செலுத்தியது; அது —திட்டமிட்டபடி—பூமியை 20 தடவைகள் சுற்றிவந்து ஆய்வுகள் நடத்திக் கொண்டிருக்கிறது.

## கங்கை --- காவிரி இணைப்பு

### ஐ. நா. ஆய்வுக் குழு திட்ட அறிக்கை

#### இந்திய அரசு பரிசீலிப்பதாகத் தகவல்

தஞ்சை, ஜூலை 4—

"வடநாட்டு ஆறுகளைத் தென்னாட்டு ஆறுகளுடன் இணைப்பது பற்றிய விவரங்களைத் தயாரிக்கும் பொருட்டு இந்தியாவுக்கு அண்மையில் வந்திருந்த ஐ.நா. ஆய்வுக் குழு, திட்ட அறிக்கை ஒன்றை அளித்துள்ளது; இந்த அறிக்கையை மத்திய அரசு ஆய்ந்து வருகிறது.

"தேவையான இடங்களில் பம்பு செய்வதன் மூலம் தென்னாட்டுக்கு ஆற்றுத் தண்ணீரைக் கொண்டுவர பீகாரில் போதுமான நீர் மின்சார சக்தி இருப்பதாக ஐ நா. குழு கருதுகிறது"

என்று மத்திய திட்டக் குழு ஆலோசகர் சி. எஸ். இராமச்சந்திரன், செய்தியாளரிடம் தெரிவித்தார்.

தஞ்சாவூர் மாவட்டத்திலும், காரைக்காலிலும், காவிரிப்படுகை பகுதியிலும் அவர் இரு நாட்கள் சுற்றுப்பயணம் செய்கிறார்; டெல்டாப் பகுதியை நவீனப்படுத்தும் பணியை அவர் பாராட்டினார்; 'நாட்டிலுள்ள மற்ற பழைய பாசன வசதிப் பகுதிகட்கும் நவீனப்படுத்தும் திட்டங்களை விரிவுபடுத்தத் திட்டக் குழு பரிந்துரைக்கும்' என்று அவர் சொன்னார்.

## பிரதாப் சந்திரன் மறைவுக்கு இரங்கல்

தமிழ்நாடு திரைப்படத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கச் செயற்குழுக் கூட்டம், 22—6—72 அன்று திரு. எஸ். ஜி கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது; அதுபோது கீழ்க்காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:—

"முன்னேற்றத் தொழிற் சங்கத் தலைவர் பிரதாப் சந்திரனைக் கொலை வெறியர்கள் சங்க வேறுபாட்டின் காரணத்தினால் படுகொலை செய்ததை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது; ஈடு செய்யமுடியாத நிலையில் தொழிற்சங்க ஊழியரைப் பகைமை காரணத்தால் அழித்துவிட்டதற்கு அனுதாபம் காட்டமுடியாத 'பெரியவர்'கள் சில ஆயிரம் ரூபாய் சேதமடைந்ததாகக் கூறி அறிக்கை விடுவது குறித்துச் செயற்குழு வருத்தம் தெரிவித்துக் கொள்ளுகிறது; மேலும் பிரதாப் சந்திரன் மறைவு தொழிலாளர் சமுதாயத்துக்கே ஈடுசெய்ய முடியாத இழப்பாகும் என்று கருதுவதுடன், அவரது பிரிவால் வாடும் தொழிலாளர்களுக்கும் -- இயக்கத் தோழர்களுக்கும் -- குடும்பத்தாருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்ளுகிறது."

## பேசுவோர் உருவத்தைக் காட்டும் டெலிபோன்

தொலைப்பேசியில் பேசும் ஒருவரின் குரலைக் கேட்பதுடன், அவரது உருவத்தையும் பார்க்கும்வகையில் புதிய 'டெலிவிஷன் டெலிபோன்' பிரிட்டனில் தயாரிக்கப்பட்டுள்ளது.

தொலைவில் இருந்தபடியே பேசினாலும், நேருக்குநேர் -- எதிர் எதிரே நின்று பேசுவதுபோல -- ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டே பேச வகைசெய்யும் இந்த டெலிவிஷன் டெலிபோன்' பிரிட்டிஷ் அஞ்சல் துறை நிபுணர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பேசுவோர் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ளும் கருவி வெற்றிகரமாக இயங்குகிறது என்றாலும், தெளிவான படம் தோன்றச் செய்வது -- தேவை இல்லாதபோது படம் காட்டும் கருவியை மட்டும் நிறுத்திவிடுவது -- தூரத்தைச் சரிசெய்து கொள்வது -- ஆகிய சில நுட்பப் பிரச்சினைகள் குறித்து இப்போது சோதனைகள் நடந்துவருகின்றன.

தற்போது கண்டுபிடித்துள்ள கருவியின்மூலம், மார்பளவுப் படங்கள் மட்டும் டெலிவிஷன் டெலிபோனில் தெரியும்; 5 முதல் 7 அங்குல உயரத்தில் இந்தப் படங்கள் இருக்கும்; டெலிபோன் இருக்குமிடத்திலிருந்து நான்கு அடிக்கும் குறைவான தூரத்திலிருந்து பார்த்தால் இப்படங்கள் தெளிவாகத் தெரியும்.

இந்த டெலிபோனில் வேறு வசதிகளும் உள்ளன; படங்கள் பிரகாசமாக விழவேண்டுமானால் அதற்கு ஒரு விசை உண்டு; குரல் பலமாகக் கேட்கவேண்டுமானால் அதற்கும் ஒரு விசை உண்டு; அழைப்பவருக்கு நாம் யார் என்பதைத் தெரிவிக்கக்கூடாது என்றால், அதற்கும் ஒரு விசை உண்டு.

## சென்னை முதல் வட்டம்

### மு. கருணாநிதி நற்பணி மன்றம்

மேற்படி மன்றத்தின் புதிய நிர்வாகிகள் தேர்தல், முதல் வட்டச் செயலாளர் பூ. நாகலிங்கம் தலைமையிலும் -- வட்ட அவைத் தலைவர் கே. இராசு முன்னிலையிலும் நடைபெற்றது; கீழ்க்காணும் தோழர்கள் நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

தலைவர்: கோ. வாசுதேவன்; செயலாளர்: இரா. விசயன்; துணைச் செயலாளர்: பா. கமலநாதன்; பொருளாளர்: சீனி. கணேசன்; செயற்குழு உறுப்பினர்கள்: ப. புஷ்பலிங்கம், எம். கேசவன், கு. மகாலிங்கம், சின்னையன், ஆ. குப்புமணி.

மறைந்த தோழர்கள் காஞ்சி மணிமொழியார், ஜலகண்டபுரம் கண்ணன், ஜி. பி. சோமசுந்தரம், சிற்றுளி சுப்பிரமணியம், பிரதாப் சந்திரன், சந்திரன் ஆகியோர் மறைவுக்கு அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## கோவையில் ஆச்சாரியார் கொடும்பாவி எரிப்பு

### 10,000 தாய்மார்கள் உட்பட 50,000 பேர் பங்கேற்ற ஊர்வலம்

#### கொட்டும் மழையிலும் நடைபெற்ற கொள்கை விளக்கப் பொதுக்கூட்டம்

கோவை, ஜூலை 3—

நேற்று கோவையில் நடைபெற்ற கொள்கை விளக்கப் பொதுக்கூட்ட ஊர்வலத்தில், 15 அடி உயரமுள்ள ஆச்சாரியாரின் கொடும்பாவி நகரின் தெருக்களெல்லாம் இழுத்துவரப்பட்டது.

ஆச்சாரியாருக்குக் கண்டனம் தெரிவிக்கும் வகையில் நடைபெற்ற இந்த ஊர்வலத்தில் 50,000 பேர் கலந்துகொண்டனர்.

ஊர்வலத்துக்கு மாவட்டச் செயலாளர் எஸ். ஏ. இராசமாணிக்கம் தலைமைதாங்கினர்.

திருமதி சிவகாமி அம்மையார் தலைமையில் 10,000 பெண்களும் ஊர்வலத்தில் கலந்துகொண்டனர்.

கழகக் கொடிகளும்--கொள்கை முழக்கங்கள் தீட்டிய பதாகைகளும் ஏந்தி கழகத் தோழர்களும் -- தாய்மார்களும் ஊர்வலமாக வ.உ.சி. திடலிலிருந்து புறப்பட்டனர்.

ஊர்வலத்தில் கோவை இராமநாதன் எம்.எல்.சி., சி. டி. தண்டபாணி எம்.பி., ஈரோடு சுப்பிரமணியம் எம்.எல்.ஏ, சாமிநாதன் எம்.பி., அரங்கநாதன் எம்.எல்.ஏ., தூயமணி எம்.எல்.ஏ., ஏ. எம். இராசா எம்.எல்.ஏ., அந்தியூர் நடராசன் எம்.எல்.ஏ., பொங்கலூர் பழனிச்சாமி எம்.எல்.ஏ, கோவை நகரமன்றத் தலைவர் சுக்கூர், மேட்டுப்பாளையம் நகர்மன்றத் தலைவர் ரசாக், பொள்ளாச்சி நகர்மன்றத் தலைவர் இராமசாமி ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஆச்சாரியாரின் கொடும்பாவியை நகரில் தெருத் தெருவாக ஊர்வலத்தில் இழுத்து வந்தனர்.

'கலைஞர்மீது களங்கம் கற்பித்த மூதறிஞரே -- மன்னிப்புக் கேள்' என்று ஊர்வலத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

ஊர்வலம் நகரின் வீதிகளில் வரும்போது மழை பிடித்துக் கொண்டபோதிலும் ஊர்வலம் கலையவில்லை.

கொடும்பாவியினை ஆர். எஸ். புரம் சுடுகாட்டு மைதானத்தில் எரித்தபோது, மக்கள் உற்சாகக் குரலெழுப்பினர்; தேர்முட்டி வீதியிலுள்ள மைதானத்தில் மக்கள் கொட்டும் மழையிலும் கூடியிருந்தனர்.

மாவட்டச் செயலாளர் எஸ். ஏ. இராசமாணிக்கம் தலைமையில் கொள்கை விளக்கப் பொதுக் கூட்டம் நடந்தது.

கூட்டத்தில் அமைச்சர் மு. கண்ணப்பன், மா. முத்துசாமி எம்.பி., சி. டி. தண்டபாணி எம்.பி., கோவை இராமநாதன் எம்.எல்.ஏ., அரங்கநாதன் எம்.எல்.ஏ., கோவை நகர் மன்றத் தலைவர் சுக்கூர், பேரூர் நகர் மன்றத் தலைவர் மெய்யப்பன், தேவசகாயம், கொடுமுடி கிருஷ்ணன் ஆகியோர் பேசினர்.

# கல்கத்தாவில் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர்.

## வங்க முதல்வர் பொன்னுடை போர்த்திப் பாராட்டுவார்

## டம் டம் விமான நிலையத்தில் தமிழ் மக்கள் உற்சாகமான வரவேற்பு

கல்கத்தா, ஜூலை 4—

கழகப் பொருளாளர் -- புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்கட்கு மேற்கு வங்க முதலமைச்சர் சித்தார்த்த சங்கர் ரே பொன்னுடை போர்த்திப் பாராட்டுரை வழங்கவிருக்கிறார்.

**இந்தப் பாராட்டு விழா, நாளை (5--7--72) மாலை 7-மணிக்கு தென் கல்கத்தாவில் உள்ள தியாகராசா மண்டபத்தில் நடைபெறும்.**

'அனைத்திந்தியாவின் சிறந்த நடிகர்' என்ற பாராட்டு விருதைப் பெற்றுக் கொள்ளுவதற்காக மக்கள் திலகம் எம். ஜி. ஆர். அவர்கள் நேற்றிரவு கல்கத்தா வந்து சேர்ந்தார்.

இரவு 10-15 மணிக்கு 'டம் டம்' விமான நிலையத்தில் எம்.ஜி.ஆர். அவர்களுக்குச் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

கல்கத்தாவில் உள்ள அறிஞர் அண்ணா தமிழ்ச் சங்கம், எம். ஜி. ஆர். ரசிகர் மன்றம், கலைஞர் கருணாநிதி தமிழ் மன்றம் ஆகியவை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த வரவேற்பு நிகழ்ச்சியில் ஏராளமான தமிழர்கள் வந்து கலந்துகொண்டு புரட்சி நடிகரை வரவேற்றனர்.

அறிஞர் அண்ணா தமிழ்ச் சங்கம், எம். ஜி. ஆர். ரசிகர் மன்றம், ஆகியவை சார்பில் 5—7—72 அன்று தியாகராசா மண்டபத்தில் நடைபெறவிருக்கும் பாராட்டுக் கூட்டத்தில் மேற்கு வங்க முதலமைச்சர் திரு. சித்தார்த்த சங்கர் ரே கலந்து கொண்டு எம். ஜி. ஆர். அவர்கட்குப் பொன்னுடை போர்த்துவார்.

இதே நேரத்தில் வரவேற்புக் குழுவின் சார்பில், சித்தார்த்த சங்கர் ரே அவர்கட்கு எம். ஜி ஆர். பொன்னுடை போர்த்துவார்.

"கல்கத்தாவிலுள்ள பல்வேறு அமைப்புகளும், தமிழ் மக்களும் இந்த நிகழ்ச்சியில் பங்கு கொள்வர்" என்று, அறிஞர் அண்ணா தமிழ்ச் சங்கத் தலைவர் செ. வீரபத்திரன் அறிவித்துள்ளார்.

## சென்னையில் வழியனுப்பு நிகழ்ச்சி

சென்னை, ஜூலை 4—

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்கள் நேற்று இரவு 7-45 மணிக்கு மீனம்பாக்கம் விமான நிலையத்திலிருந்து கல்கத்தாவுக்குப் பயணமானார்; அவருடன் அவரது துணைவியார் திருமதி ஜானகி இராமச்சந்திரனும் சென்றுள்ளார்.

விமானநிலையத்தில் ஆயிரக்கணக்கான கழகத் தோழர்களும் -- ரசிகர்களும் கூடி நின்று வாழ்த்தொலி எழுப்பி வழியனுப்பி வைத்தனர்.

சென்னை மாவட்ட தி. மு. க. செயலாளர் நீலநாராயணன், முன்னாள் மேயர் சா. கணேசன், ஆர். எம். வீரப்பன், மற்றும் கலையுலகப் பிரமுகர்கள் பலரும் வந்திருந்து மாலையணிவித்து வழியனுப்பினர்.

## அண்ணாவுக்கு அஞ்சலி

எம். ஜி ஆர். அவர்கள் தாம் கல்கத்தா புறப்படுவதை முன்னிட்டு நேற்று மாலை 4-மணியளவில், பேரறிஞர் அண்ணா கல்லறைக்குச் சென்று மலர் வளையம் வைத்து வணங்கி வந்தார்.

## கழகத் தலைவர் கலைஞர் பொன்னுடை போர்த்தினார்

அடுத்து, முதலமைச்சர் கலைஞரிடம் விடைபெற்றுக் கொள்வதற்காக எம். ஜி. ஆர். அவர்கள் முதலமைச்சர் இல்லம் சென்றார்; அவரை கலைஞர் வரவேற்று பொன்னுடை போர்த்தி வழியனுப்பி வைத்தார்.

## சென்னையில் பாராட்டு விழா

கல்கத்தாவில் சிறந்த நடிகருக்கான விருதினைப் பெற்றுத் திரும்பும் புரட்சி நடிகருக்குச் சென்னையில் மாபெரும் பாராட்டுப் பொதுக்கூட்டம் நடைபெறவிருக்கிறது.

சென்னை மாவட்ட தி. மு. க. சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தப் பொதுக்கூட்டம், வருகிற வெள்ளிக்கிழமை மாலை 6-மணிக்குக் கடற்கரைச் சீரணி அரங்கில் நடைபெறும்.

முதலமைச்சர் கலைஞர் தலைமை வகிப்பார்.

கல்வியமைச்சர் நாவலர் -- மற்றும் அமைச்சர் பெருமக்கள், சிலம்புச் செல்வர் ம. பொ. சி., மற்றும் அனைத்துக் கட்சித் தலைவர்களும், நடிக -- நடிகையர்களும் கலந்துகொள்வார்கள்.

இந்தப் பொதுக்கூட்டம் துவங்குவதற்குமுன் இன்னிசை நிகழ்ச்சி நடைபெறும்.

பொதுக்கூட்டம் முடிந்ததும், எம். ஜி. ஆர். நடித்த படங்களின் சிறந்த காட்சிகள் சீரணி அரங்கில் திரையிடப்படும்.

## மதுரை நகர தி.மு.க. தோழர்கட்கு:

வருகிற ஆகஸ்டு 4, 5, 6-ஆம் நாட்களில் மதுரை ரேஸ் கோர்ஸ் மைதானத்தில் நடைபெறும் தி.மு.க. 5-வது மாநாட்டில் தொண்டராகப் பதிவு செய்துகொள்ள விரும்பும் மதுரை நகரக் கழகத் தோழர்கள் அந்தந்த வட்டாரச் செயலாளர்களிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுகிறார்கள்.

தொண்டர்கள் பதிவு செய்து முடிந்ததும், மங்கம்மாள் சத்திரம் 1-ஆக பிளாக்கில் உள்ள மாநாட்டு அலுவலகம் பொறுப்பாளரிடம் சேர்ப்பிக்குமாறு மதுரை நகர் தி. மு. கழகச் செயலாளரும் மதுரை மாநாட்டின் செயலாளர்களில் ஒருவருமான கு. திருப்பதி அறிவிக்கிறார்.

## முருகு பாண்டியன்

**கலை நிகழ்ச்சிகள்**

ஜூலை 5: கீழசேவற்பட்டி; 6: அதிராம்பட்டினம்; 9: நாகப்பட்டினம்; 10: சடையன்கோட்டகம்; 11: சங்கமங்கலம்; 12: முருங்கப்பேட்டை; 15: வெண்ணவாசல்; 16: மதுக்கூர்; 17: சர்க்கரணசுவரபுரம்; 22: சுகுணாபுரம்; 23: போத்தனூர்; 24: மாச்சம்பாளையம்; 25: பொம்மண்ணம்பாளையம்.

பொதுப்பணித் துறை அமைச்சர்

## எஸ்.ஜே. சாதிக் பாட்சா

**நிகழ்ச்சிகள்**

ஜூலை 5 காலை 8-30 மணி: கிரிசமுத்திரம் ஊராட்சி வரவேற்பு; 9 மணி: வளையாம்பட்டு தொடக்கப் பள்ளிக் கட்டடத் திறப்பு; 10 மணி: பீ. நாயக்கனூர் தொடக்கப் பள்ளிக் கட்டடத் திறப்பு; 11 மணி: ஆண்டியப்பனூர் நீர்த் தேக்கம் பார்வையிடுதல்; மதியம் 12 மணி: புலுகூர்பள்ளி தரைமட்ட நீர்த் தேக்கத் துவக்க விழா; மாலை 4 மணி: வெள்ளைக்குட்டை ஊராட்சிக் கட்டடத் தொடக்க விழா; 5-30 மணி: ஈச்சங்காலைத் தொடக்கப் பள்ளிக் கட்டடத் திறப்பு; 6-30 மணி: ஜாப்ராபாத் ஊராட்சி வரவேற்பும், தாய்--சேய் நல விடுதித் துவக்க விழாவும்; இரவு 7-30 மணி: வாணியம்பாடி பொதுமக்கள் வரவேற்பு.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தார்.

"பல இலட்சக்கணக்கான வங்க தேச மக்களை படுகொலை செய்த -- பயங்கர கொடுமைகளுக்கு உள்ளாக்கிய பாகிஸ்தான் போர்க் குற்றவாளிகள் சிறிதளவு அனுதாபத்திற்குக்கூட உரியவர்கள் அல்லர்" என்று அவர் சொன்னார்.

வங்காள தேசத்தில் பாகிஸ்தான் இராணுவம் புரிந்த கொடுமைகள் பற்றி வெட்கப்படுவதற்கு மாறாக அதிபர் பூட்டோ பெருமை கொள்வது பற்றி முஜிப் வருத்தம் தெரிவித்தார்.

"வங்காள தேசம் ஒரு சுதந்திர நாடு; என்றென்றும் அது சுதந்திர நாடாக நீடிக்கும்" என்றும் அவர் கூறினார்.

# 'காம்ரேடு'களின் சாயம் வெளுக்கிறது'

## நிலப்பிரபுக்களுக்கு வலது கம்யூனிஸ்டுகளின் இரவல் குரல்

### கிராமத்து பூர்ஷ்வாக்களுக்கே எடுபிடிகளாக மாறியது எப்போது?-- விவசாய வருமான வரியை எதிர்ப்பவர்கள் ஏழைகளின் தோழர்களா?

"பயிர்வாரி அடிப்படையில் விவசாய வரி வசூலிப்பது கூடாது; இப்போது விதிக்கப்பட்டிருக்கின்ற விவசாய வருமான வரி சகிக்கக் கூடாதது" என்றெல்லாம் வலதுசாரிக் கம்யூனிஸ்டுகள் அறிக்கை விட்டிருப்பது பற்றியும், இதுவரையில் ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்காகப் போர்க் குரல் எழுப்பிவந்த வலதுசாரிகள் இப்போது நிலப் பிரபுக்களுக்காக, 'இரவல் குரல்' கொடுக்க முனைந்திருப்பது பற்றியும், 'இப்போதுள்ள விவசாய வருமான வரி கூடாது -- அதைக் குறைக்க வேண்டும்' என்று கூறும்போது தங்களை அறியாமலேயே அவர்கள் கிராமத்துப் பூர்ஷ்வாக்களுக்கு எடுபிடிகளாக எப்படி -- எந்த நிலையில் மாறுகிறார்கள் என்பது பற்றியும், 'காம்ரேடுகள் சிந்தனைக்கு' என்ற தலைப்பில் எழுதியுள்ள கட்டுரையில் முரசொலி மாறன் விளக்கிக் கூறியிருக்கிறார்; அது வருமாறு :-

முதலமைச்சர் அறிவித்திருக்கின்ற புதிய சலுகைப்படி, 15 ஏக்கரில் கரும்பு பயிரிட்டால், அது, வரி விதிப்புக் காரணங்களுக்காக 30 ஸ்டாண்டர்டு ஏக்கராவாகக் கருதப்படும்.

இதில் முதல் 7½ ஸ்டாண்டர்டு ஏக்கராவிற்கு விவசாய வருமான வரி கிடையாது; அடுத்த 2½ ஸ்டாண்டர்டு ஏக்கராவிற்கு ரூ 15 வீதம் ரூ. 37.50 வரி கொடுக்கவேண்டும்; அடுத்த 5 ஸ்டாண்டர்டு ஏக்கராவிற்கு ரூ. 25 வீதம் ரூ. 125 வரி விதிக்கப்படுகிறது; அடுத்த 5 ஸ்டாண்டர்டு ஏக்கராவிற்கு ரூ. 35 வீதம் ரூ. 175 வரி விதிக்கப்படுகிறது; அடுத்த 5 ஸ்டாண்டர்டு ஏக்கராவிற்கு ரூ. 45 வீதம் ரூ. 225 வரி தரவேண்டும்; மீதமுள்ள 5 ஸ்டாண்டர்டு ஏக்கராவிற்கு ரூ. 60 வீதம் ரூ. 300 வரி தரவேண்டும்; ஆக மொத்தம் வரி ரூ. 862.50 ஆகிறது.

ஆனால், வருமானம் என்ன கிடைக்கிறது என்று பார்ப்போம்; ஒரு முழு ஏக்கருக்கு சுமார் 25 டன் கரும்பு விளைவதாகக் கொள்வோம் -- (வாதத்திற்காகக் குறைந்த விளைச்சலையே இங்கே எடுத்துக்கொள்கிறோம்; உண்மையில் சேலம்--கோவை போன்ற மாவட்டங்களில் 40-முதல் 50-டன் விளைகிறது); கரும்புப் பயிர் நடுவதிலிருந்து ஆலைக்குக் கொண்டுபோய் விற்பதுவரை ஆகும் செலவுத் தொகை என்ன?

மிகத் தாராளமாக விளைச்சலில் பாதியை (அதாவது 25 டன் விளைகிறது என்றால் அதில் 12½ டன் கரும்பு விற்றுவரும் தொகையை) விவசாயியின் உற்பத்திச் செலவுகளுக்காக ஒதுக்கிவிடுவோம்; உண்மையில் உற்பத்திச் செலவு இதைவிடக் குறைவுதான்; மீதி விற்பனைக்கு இருப்பது 12½ டன் கரும்பு ஆகும்.

ஒரு டன் கரும்பு குறைந்தபட்சம் ரூ. 85க்கு விற்பனையாகிறது என்று வைத்துக்கொண்டால், அதனால் விவசாயிக்கு ரூ. 106.50 கிடைக்கிறது -- இது; ஒரு ஏக்கருக்கு; இதில் ரூ. 62.50-யும் தள்ளிவிட்டு 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் வருமானத்தைக் கணக்கிட்டால் குறைந்தபட்சம் ரூ. 15,000 ஆகிறது; ஆனால் உண்மையில் வருமானம் இன்னும் அதிகம் என்றும் கருதப்படுகிறது.

ரூ. 15,000 கரும்பு பயிரிட்ட நிகர இலாபத்திற்கு அந்த விவசாயி வருமான வரியாகத் தரவேண்டியது ரூ. 862 மட்டுமேதான்!

**இதே அளவு ஒரு வியாபாரத்தில் இப்படி ரூ. 15,000 இலாபம் வந்தால், அவர்கள் மத்திய அரசுக்கு வருமான வரியாகக் கட்ட வேண்டியது ரூ. 1,485 ஆகும்.**

**ஆனால் விவசாயத் துறையில் ஈடுபட்டிருப்பதால், அவர்கள் ரூ. 862 மட்டும்தான் கட்டவேண்டியிருக்கிறது.**

**கரும்பு இதைவிட இரண்டு பங்கு அதிகம் விளையும் கோவை -- சேலம் போன்ற மாவட்டங்களை எடுத்துக் கொண்டால், 5 ஏக்கரில் கரும்பு பயிரிடும் விவசாயிக்குக் கிடைக்கின்ற நிகர இலாபம் ரூ. 30,000 ஆகும்; அந்த ரூ 30,000-த்துக்கு அவர்கள் வரியாகத் தரவேண்டியது ரூ. 862 மட்டுமேதான்!**

**இதே ரூ. 30,000 வேறு வியாபாரத்தின் மூலம் இலாபமாக வந்தால், அவர்கள், வருமான வரியாக மத்திய அரசுக்குக் கட்ட வேண்டியது ரூ. 6,900 ஆகும்.**

மலைக்கும் -- மடுவிற்கும் உள்ள இந்த வேறுபாட்டைப் பார்த்தீர்களா?

ஆண்டொன்றுக்கு ரூ. 15,000-த்திலிருந்து ரூ. 30,000 சம்பாதிக்கின்ற 'குலாக்'குகளுக்காகத்தான இப்போது கம்யூனிஸ்டுக் கல்யாணசுந்தரனார்கள் போர்க் கொடி தூக்கியிருக்கிறார்கள்!

"விவசாயத் துறையில் உற்பத்தியும் - வருவாயும் அண்மைக்காலங்களில் அதிகரித்துவிட்டது; ஆனால், வருவாய் உயர்வுக்கேற்ற வரி அரசுக்குக் கிடைக்கவில்லை; எனவே கிராமத்துக் குபேரர்களின் பக்கம் கவனத்தைத் திருப்புங்கள்; அப்போதுதான் சமத்துவ சமுதாயம் அமைக்க முடியும்" என்கிறார்கள் -- திரு. சவானும், திரு. சுப்பிரமணியமும்; இங்கே இருக்கின்ற அவர்களுடைய ஒன்றிரண்டு சீடர்கள் அதைக் காதில போட்டுக் கொண்டதாகத் தெரியவில்லை; அவர்களைப் பற்றி அனைவருக்கும் தெரியும்.

ஆனால், இந்த வலதுசாரிகளுக்கு வந்த கேடு என்ன? குறைந்தது ரூ. 15,000-த்திலிருந்து ரூ. 30,000 வரை வருமானமுள்ள நிலக்கிழார்களுக்கும் -- அதற்குமேல் அறுவடை செய்யும் மன்றாடியார்களுக்கும் தொண்டர்களை இரவல் கொடுக்கக் கட்சித் தலைமை துணிந்தது ஏன?

ஒரு தனி நபரின் கோபதாபங்களுக்காக ஒரு கட்சியின் ஜீவநாடியான கொள்கை பலியாக வேண்டுமா? -- இதைத்தான் வலதுசாரி நண்பர்கள் சிந்திக்க வேண்டும்."

## மருத்துவமனையில் இளமுருகு பொற்செல்வி

சென்னை, ஜூலை 4—

'அஞ்சுகம்' ஏட்டின் ஆசிரியரும் தி. மு. கழக முன்னணித் தோழருமான மீ. சு. இளமுருகுபொற்செல்வி அவர்கள் உடல்நலமின்றி 13-6-72 முதல் சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்; இன்று அவருக்கு அறுவைச் சிகிச்சை நடைபெறக்கூடும்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, [illegible] தெரு, சென்னை-1[illegible]) [illegible] வெளியிடப்படுகிறது.